## <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.414/2021</u>** **<u>தேதி.25.07.2025</u>**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 25.07.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| பெயர் | | விஜயன் |
| த/பெ. | | கண்ணன் |
| வயது | | 67/2025 |

துவக்க நேரம் 12.40 PM

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்யப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் நிறுவன ஊழியர் ஆவேன். இந்த வழக்கில் பிரதிவாதிகளை எப்படி தெரியும், எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் நான் பணம் கொடுத்ததற்கு 1 வருடத்திற்கு முன்பு தெரியும். 1 வருட பழக்கத்தில் எதன் அடிப்படையில் பிரதிவாதிகளை நம்பி இவ்வளவு பெரிய தொகை கொடுத்தேன் என்றால் பழக்கத்திலும், அவர் கடை நடத்தி வந்தார் அதன்அடிப்படையிலும், கொடுத்தேன்.

2. நான் பணம் கொடுத்ததற்கு ஏதேனும் கணக்கு, வழக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த பணம் என்னிடம் இருந்ததற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரொக்கமாக வீட்டில் வைத்திருந்தேன், கொடுத்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் சீட்டில் எழுதியுள்ள விவரங்களை எழுதியது நான்தான். சீட்டு (பி.வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). பிரதிவாதிகள் என்னிடம் ரூ.2,00,000/- சீட்டு கட்டிவந்தார்கள் என்றாலும், இதில் ரூ.1,00,000/-யை திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றாலும், மீதி இருந்த ரூ.1,00,000/-க்கும் வட்டிக்கும், பிணையமாக வெற்று கடன் உறதிச்சீட்டை கையெழுத்திட்டு கொடுத்தார்கள் என்றாலும், அதனை நான் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அதிக தொகையையும், விவரங்களையும் பூர்த்தி செய்துகொண்டு தவறான நோக்கத்தோடு பணம் பரிக்கவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சீட்டு நடத்தவில்லை.

4. நான் கோரியுள்ள வட்டி தொகையான 24 சதவீதம் என்பது அதிகப்படியான வட்டி தொகை என்றால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த சீட்டில் உள்ள தொகையை மட்டும்தான் பிரதிவாதிகள் எனக்கு கொடுக்கவேண்டும் என்றாலும், சரியல்ல. ரூ.3,50,000/- பணம் கொடுக்கவேண்டியது உண்மை. வட்டித்தொகைக்காக இந்த சீட்டை(பி.த.சா.ஆ.1) எழுதிக்கொடுத்தேன்.

5. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதிச் சீட்டில் உள்ள சாட்சிகள் எனக்கு வேண்டப்பட்வர்கள் என்றாலும், தவறான தொகையை நிரப்பி சட்டமுரணாக ஆதாயம் தேட இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டமுறைப்படி நான் இந்த வழக்கை தாக்கல் செய்யாததாலும் தூய கரங்களுடனும், உண்மை சங்கதிகளுடனும் இந்த நீதிமன்றத்தை நாடாததால், இந்த வழக்கை செலுவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:- இல்லை.

முடிவு நேரம்  12.55 PM

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.